<u>**அசல் வழக்கு எண்.23/2019**</u>

<u>**தேதி: 03.03.2025**</u>

**<u>வா.சா. 2:</u> (திரு. சோழன், த/பெ. தனபால்)**

<u>**முதல் விசாரணை**</u>

**நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். உத்திரமேரூரில் வாதியின் வீட்டில் வாதியிடம் பாலகிருஷ்ணன் என்பவர் கடந்த 17.02.2017 அன்று ரூ.10,00,000/- என் முன்னிலையில், பெற்றுக் கொண்டு ரூ.5,00,000/- வீதம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு இரண்டு 50 ரூபாய் பத்திரங்களில் கையெழுத்து போட்டார். அந்த சமயத்தில் நான் உடனிருந்தேன். நான் அந்த இரண்டு பத்திரங்களிலும் 1வது சாட்சியாக கையொப்பம் செய்தேன்.**

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.5** | **17.02.2017** | **தேதியிட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம்** |
| **வா.சா.ஆ.6** | **17.02.2017** | **தேதியிட்ட வா.சா.ஆ.2 ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம்** |
| **வா.சா.ஆ.7** | **---** | **என்னுடைய ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிடப்பட்டது)** |

மேற்படி ஆவணங்கள் வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ-7 வரையிலான ஆவணங்களாக குறியீடுச் செய்யப்படுகிறது.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.